புதுக்கோட்டைமாவட்டசட்டப்பணிகள் ஆணையம்

செய்திக்குறிப்பு

சட்டதன்னார்வலர்கள் பணிக்கு விண்ணப்பிக்க அழைப்பு

தேசிய சட்டப்பணிகள் ஆணைக்குழுவின் சட்ட தன்னார்வலர் திட்டம் (திருத்தப்பட்டது) மற்றும் தமிழ்நாடு மாநில சட்டப்பணிகள் ஆணைக்குழுவின் கடிதம் எண். TNSLSA/6182/S3/2026/6593, நாள் 03.11.2026-ன்படி, புதுக்கோட்டை மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழுவில் சட்ட தன்னார்வலர்களாகப் பணியாற்ற விருப்பமுள்ள, தகுதியுடைய நபர்களிடமிருந்து **(20 நபர்கள்)** விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

1. **<u>தகுதிகள் மற்றும் நிபந்தனைகள்:</u>**

- விண்ணப்பதாரர் புதுக்கோட்டை மாவட்டத்தில் வசிப்பவராக இருக்க வேண்டும்.
- எழுதப் படிக்கத் தெரிந்தவராகவும், பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்றவராகவும் இருப்பது விரும்பத்தக்கது.
- சமூகப் பணியில் ஈடுபடும் ஆர்வமும் அர்ப்பணிப்பும் இருக்க வேண்டும்.

2. **<u>பின்வரும் பிரிவினர் விண்ணப்பிக்கலாம்:</u>**

- ஆசிரியர்கள் (ஓய்வு பெற்றவர்கள் உட்பட).
- ஓய்வு பெற்ற அரசு ஊழியர்கள் மற்றும் மூத்த குடிமக்கள்.
- சமூகப் பணி (M.S.W) மாணவர்கள்.
- அங்கன்வாடி பணியாளர்கள்.
- மருத்துவர்கள்.
- மாணவர்கள் மற்றும் சட்ட மாணவர்கள் (வழக்கறிஞராகப் பதிவு செய்யும் வரை).
- அரசியல் சார்பற்ற, சேவை நோக்குடைய தன்னார்வ அமைப்புகள் மற்றும் மன்றங்களின் உறுப்பினர்கள்.
- மகளிர் சுயஉதவி குழுக்கள் மற்றும் ஒடுக்கப்பட்ட / பாதிக்கப்பட்ட பெண்களுக்காக பணிபுரியும் தொண்டு நிறுவனங்களை சார்ந்த உறுப்பினர்கள்.
- சட்டத்தில் முதுநிலை மாணவர்கள், ஓய்வு பெற்ற சட்டப் பேராசிரியர்கள், ஓய்வு பெற்ற நீதித்துறை அலுவலர்கள், வருவாய்த்துறை அலுவலர்கள்.
- மாவட்ட சட்ட பணிகள் ஆணையம், சட்ட தன்னார்வலர்கள் ஆக பணிபுரிய தகுதியானவர் என்று கருதும் வேறு எந்தவொரு நபரும்.

3. **<u>மதிப்பூதியம் மற்றும் பணிக்காலம்:</u>**

- இது தன்னார்வப் பணியாகும்; அரசுப் பணி அல்ல. திட்ட விதிகளின்படி கௌரவத் தொகை/மதிப்பூதியம் (Honorarium)மட்டும் வழங்கப்படும்.

4. **விண்ணப்பிக்கும் முறை:**

விண்ணப்பப்படிவத்தை இணையதளம் மூலம் https://pudukkottai.dcourts.gov.in/ என்ற இணையதளதில் "Notification" பகுதியில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். பூர்த்தி செய்த விண்ணப்பத்துடன் பின்வரும் ஆவணங்களின் சுய சான்றொப்பமிட்ட நகல்களை இணைக்க வேண்டும்:

1. கல்விச் சான்றிதழ்கள்
2. வயது / பிறந்த தேதிக்கான சான்று
3. ஆதார் அட்டை / இருப்பிடச் சான்று
4. ஒரு பாஸ்போர்ட் அளவு புகைப்படம்

முறையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை **24.11.2026**-ம் தேதி மாலை 05.00 மணிக்குள் **"தலைவர்/முதன்மை மாவட்ட நீதிபதி, மாவட்ட சட்டப்பணிகள் ஆணையம், புதுக்கோட்டை-622001"** என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு இதன் மூலம் கேட்டுகொள்ளப்படுகிறது. இறுதி நாளுக்கு பிறகு பெறப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

தகுதியான விண்ணப்பங்களின் அடிப்படையில் சம்மந்தப்பட்ட விண்ணப்பதாரர்கள் வரும் **26.11.2026-ம் தேதி மதியம் 3.00** மணிக்கு புதுக்கோட்டை மாவட்ட ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்திற்குள் இருக்கும் சமரச தீர்வு மைய அலுவலகத்தில் (ADR Building) நேர்முகத்தேர்வின் மூலம் தேர்வு செய்யப்படவுள்ளனர்என இதன் மூலம் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

இடம்: புதுக்கோட்டை.
தேதி: 12.11.2026.

ஒம்/- திருமதி.S.ஹெர்மிஸ்
தலைவர்/முதன்மை மாவட்ட நீதிபதி,
மாவட்ட சட்டப்பணிகள் ஆணையம்,
புதுக்கோட்டை.

// உத்தரவுப்படி //

செயலாளர்/மூத்த சிவில் நீதிபதி,
மாவட்ட சட்டப்பணிகள் ஆணையம்,
புதுக்கோட்டை.

மாவட்டசட்டப்பணிகள் ஆணையம்,புதுக்கோட்டை

சட்டதன்னார்வலர்கள் விண்ணப்பபடிவம்

1.	விண்ணப்பதாரர் பெயர் Name (In Capital Letters)		விண்ணப்பதாரர் சமீபத்தியபுகைப்படம் (சுயசான்றெப்பம் இடவும்)
2.	தகப்பனார் / கணவர் பெயர் Father's / Husband's Name		
3.	நிரந்தரமுகவரி Permanent Address		
4.	தற்போதையமுகவரி Current Address		
5.	வயது/ Age		
6.	பாலினம்/ Sex	ஆண் ☐/பெண் ☐/திருநங்கை☐ (Male / Female / Transgender)	
7.	கைபேசி எண் / Mobile Number		
8.	மின்னஞ்சல் முகவரி/ E-Mail Address		
9.	கல்வித்தகுதி Educational Qualifications		
10.	கணினிபயன்பாட்டுத் திறன் Computer proficiency		
11.	தற்போதைய தொழில்/பணி Present occupation / work:		
12.	எந்தப் பிரிவின் கீழ் விண்ணப்பம் செய் (ஆசிரியர்/ஓய்வுபெற்றஅரசுஊழியர் /மூத்தகுடிமகன் /MSW மாணவர் /அங்கன்வாடிபணியாளர் /மருத்துவர/மாணவர் /சட்டமாணவர் /தன்னார்வஅமைப்புஉறுப்பினர்/பிறர்)		
13.	சமூகப் பணி அல்லது சட்டவிழிப்புணர்வு தொடர்பான அனுபவம் (ஏதேனும் இருப்பின்) Experience in Social Service.		
14.	குற்றவழக்குகளில் ஏதேனும் நீவிர் சம்பந்தப்பட்டவராக இருந்தால்,அதன் பற்றியவிவரம் குறிப்பிடவும் Have you been involved in any Criminal activities? if yes, furnish the details.		

இடம் / Place:
நாள் / Date :

விண்ணப்பதாரரின் கையெழுத்து/
Signature of the Applicant

- ✓ மேற்கண்டவிபரங்கள் யாவும் உண்மையெனஉளமாறஉறுதி கூறுகிறேன்.
- ✓ சட்டம் சார்ந்ததன்னார்வலர்பணிநிரந்தரபணிஅல்ல,தற்காலிகமானதுமற்றும் அதற்குஊதியம் எதுவும் கிடையாது.சேவைக்குதகுந்தமதிப்பூதியம் மட்டுமேஅளிக்கப்படும்.
- ✓ பணிநிரந்தரம் செய்யஉரிமைஎதுவும் நான் கோரமுடியாது.

மேற்குறிப்பிடப்பட்டுள்ளவிபரங்களைநான் படித்துஅறிந்துகொண்டேன்.

இடம் / Place:
நாள் / Date :

விண்ணப்பதாரரின் கையெழுத்து/
Signature of the Applicant